V. Selvanesan Library

# இராச கோபுரம்



அமரர்

## திரு. முருகேசு இராசேந்திரம்

அவர்களின் அமரத்துவ

# நினைவு மலர்

ஆலங்கட்டை

வடஅல்வை

05-11-1998



## அமரர் திரு. மு. இராசேந்திரம்

| | |
|---|---|
| தோற்றம்: | மறைவு: |
| 30 - 05 - 1928 | 07 - 09 - 1998 |

### திதிநிர்ணய வெண்பா

ஆண்டாம் வெகுதானிய ஆவணித் திங்களில்
பூண்டதிதி அபரபட்ச பிரதமையில் - வேண்டுதலால்
முருகேசு இராசேந்திரம் முறையுடனே வாழ்வகன்று
அரனடியை சேர்ந்தார் அறி.

N·A

உ
சிவமயம்

# தோத்திரப் பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## தேவாரம்

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாம்
திருவடிமேல் அலரிட்டுத் தேடிநின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலை கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடுநோகே னார்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீயருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள் புரியாயே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா

ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன்
விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

அண்ண லேயெனை யாண்டுகொண் டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னாற்றிருக் கயிலையி லிருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

# இராசகோபுரம்

## அமரர் மு. இராசேந்திரம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

அலையும், கலையும் ஆர்த்தெழுகின்ற வட அல்வை குரும்பிலாவத்தையம்பதிதனில் அன்பும், பண்பும், செல்வமும் ஒருங்கமைய நல்வாழ்வு இயற்றி நின்ற முருகேசு செல்லம்மா தம்பதியினருக்கு மூத்த புதல்வராக அமரர் திரு முருகேசு இராசேந்திரம் அவர்கள் 30. 05. 1928ல் புவிதனில் அவதரித்தார்.

தனது குடும்பத்தவர் உறவினர் மத்தியில் கண்ணியமும் பொறுப்புமுள்ளவராக வளர்ந்த இவர் அல்வாய் தெற்கில் சீருடன் வாழ்ந்த தாமோதரம் பொன்னம்மா தம்பதியினரின் புத்திரியான தங்கம்மா அவர்களை திருக்கரம்பற்றி இல்லற வாழ்வுதனில் பிரவேசித்தார். இவர்தம் இல்லறத்தில் இணைபிரியாது இன்புற்று வாழ்ந்ததன் பயனாக திரு. இராஜேஸ்வரன் (உதவிப் பதிவாளர் யாழ் பல்கலைக்கழகம், செயலாளர் யாழ் லயன்ஸ் கழகம்) திரு. ஜெயனேஸ்வரன், திரு. குகனேஸ்வரன் (மட்டுநகர்) திருமதி தங்கநிலா, சந்திரவேல், திரு. குமரேஸ்வரன் (பரு. ப. தெ. வ கூ. ச) திரு. முருகேஸ்வரன், செல்வன். ஞானேஸ்வரன் (லண்டன்) திருமதி. உதயநிலா உதயணன் (லண்டன்) செல்வி. வெண்ணிலா ஆகியோரை நல்மக்கட் செல்வங்களாகவும் திருமதி. இராஜசுலோசினி (மட்டுநகர்), திருமதி நிதிகலா, திருமதி. புஸ்பலதா (மட்டுநகர்), திரு. மா. சந்திரவேல், திருமதி. நந்தினி, திருமதி. சுகந்தி, திரு. க. உதயணன் (லண்டன்) ஆகியோரை அன்பு மருமக்களாகவும் வாய்க்கப் பெற்றார்.

பேரப்பிள்ளைகளாக செல்வன். இராஜவர்மன், செல்வி. இராஜவர்த்தனி, இராஜவினோதினி, இந்திரவர்மன், நிவேதிகா, ஜெதுர்ஷா, நிருபா, ஜெனுஷா, ச. சாருஷா,

ச. வீனுஷா, கு. மதுர்ஷன், கு. ஹர்சாயினி, கு. பிரணவன், மு. தர்ஷிகன், உ. பிருத்திகா ஆகியோரையும் பெற்று மகிழ்ந்தார்.

அத்துடன் தம் இனிய உடன்பிறப்புகளாக திரு. வடிவேலு, திருமதி. பூரணம் சதாசிவம், திருமதி. வசந்தா தேவி பரஞ்சோதி, திரு. கந்தசாமி, திரு. சிவஞானசுந்தரம், திரு கோவிந்தராஜன் (ஜேர்மனி), திரு. வரதராஜன் (கொழும்பு) திருமதி செல்வராணி சித்திவிநாயகம், திருமதி, செல்வாம்பிகை முருகானந்தம் ஆகியோரை கொண்டவராவார்.

மைத்துனர் மைத்துனிகளாக திரு. தா. வீரசிங்கம், திரு. தா. பேரின்பநாதன், சிவபாக்கியம், சிந்தாமணி, அம்பிகாபதி, தவநாயகி ஆகியோரை கிடைக்கப் பெற்றார்.

இத்தகைய நீண்ட வம்சவிருத்தி கொண்ட இவரது வாழ்வு தர்மவழியில் தவமியற்றிய நிர்மலமான வாழ்வாரும். அவரில் பகைகொண்டோர் யாருமிலர். அன்னார் சிறுவயதிலேயே குடும்பப் பொறுப்புக்களை தம் தோளில் சுமந்து தன் சகோதரர் உறவினர் வாழ்வு ஒளிபெற தன்னை ஆகுதியாக்கியவர்.

சிறுவயதிலிருந்தே விவசாயத்தில் நாட்டம் கொண்டு வளமான மண்ணில் வளங்கண்டவர் அமரரவர்கள். செய்யும் தொழிலே தெய்வம் என்ற கோட்பாட்டின் வழிநின்று தொழில்வளம் பெருக்கியவர்.

தவிர அமரர் ஆன்மீகப்பற்று மேலோங்கப் பெற்றவர். தான் வாழ்ந்த சமூகச்சூழலில் ஆன்மீகப் பண்புகள் தழைக்க வேண்டுமென்ற அவாவினால் இறைபணிகள் பல ஆற்றியவர். தான் நிதமும் தொழுது வணங்கும் வட அல்லை குச்சம் ஞானவைரவர் ஆலயத்தின் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டியவர். ஒரு காலப்பகுதியில் மூன்

னோர்களால் ஆலயத்தில் உயிர்ப்பலி நடாத்துகின்ற வழக்கிருந்தது. இவர் இளைஞராக இருந்த வேளை உயிர்ப்பலியை தடை செய்ய வேண்டுமென்ற அணியின் தீவிர பற்றாளராக நின்று ஆலயத்தில் அதனைத் தவிர்த்து சைவாகம வழிபாட்டு முறைகள் தழைத்தோங்க வழிகாட்டினார். அத்துடன் ஆலயத்தின் நிர்வாகத்தில் பொருளாளர் பதவி மற்றும் பொறுப்புகளை ஏற்று ஆலய வளர்ச்சியில் அக்கறை காட்டினார். அத்துடன் ஆலயக் கிணறு உருவாக்கத்திலும் முன்நின்றவர். ஆலயத்தில் தருவிருட்சப் பொலிவு வேண்டி தனது வீட்டிலிருந்தே அரசமரக்கன்று ஒன்றை எடுத்துச் சென்று நாட்டினார். அம்மரம் இன்று ஓங்கி வளர்ந்து அகலக்கிளை பரப்பி பெருவிருட்சமாக நின்று ஆலயத்துக்கு பொலிவைத் தரும் காட்சி அவரது நல்லிதயத்துக்குச் சான்றாகும்.

அமரர் தேவார திருவாசகங்களை பண்ணுடன் இசைக்கும் இசைஞானமிக்கவர். அத்துடன் தமிழில் இலக்கண இலக்கிய அறிவு நிரம்பப் பெற்றவர். இத்தகைய பண்புகளை அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அனுபவத்திற் கொள்வர். மேலும் நக்கீரன் சனசமூக நிலையத்தின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் அவரது பங்குப்பணி குறைவானதல்ல. இத்தகைய சமூகப் பணிகளில் தனது பிள்ளைகளையும் ஊக்குவித்து வழிகாட்டியாக விளங்கினார்

இவற்றைவிட தனது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு அவர்களுக்கு வேண்டிய கல்வியை வழங்கி அவையின் கண் முந்தியிருக்க வழிகாட்டி வந்துள்ளார்.

அவர்நம் பூர்வ புண்ணிய பிராப்த பலனாக அவரது மூத்தமகன் கல்வியில் முன்னேறி இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உதவிப்பதிவாளராக உயர்பதவியில் விற்றுள்ளார். அத்துடன் அவரது பேரப்பிள்ளைகளாக செல்வன் இ. இராஜவர்மன் மருத்துவத்துறைக்கும் இ. இராஜவர்த்தனி உயிரியல் துறைக்கும் தெரிவாகி உள்ளனர். இத்தகைய கல்விப் பேறுகளுக்கு அன்னாரின் தூண்டுதல் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய நற்பண்புகளைக் கொண்ட அமரர் இராசேந்திரம் அவர்களது இறப்பின் தன்மை எல்லோராலும் வியக்கத்தக்க தொன்றாகும். அவர் இவ்வுலகை நீக்கும் கடைசி வேளையிலும் மனைவி, மக்களுடன் அன்பாகப்பேசி தேவார திருவாசகங்களை பண்ணுடன் இசைத்தபடி இறைவனின் திருவடியைச் சேர்ந்தார் என்ற செய்தி இறையடியார்கள் பலரின் இறப்பின் தன்மையை எமக்கு ஞாபகமூட்டுவதாய் அமைந்துள்ளது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுவோமாக!

சாந்தி சாந்தி சாந்தி



## மரணத்தால் நீ உயர்ந்தாய்

நவமணிகள் பெற்றெடுத்து
மணிமொழிகள் எடுத்துரைத்தாய்
நல்லதொரு வாசகனாய்
பல்துறையும் அறிந்திருந்தாய்
பல்கலைக் கழகமதில்
நூலகராய் பணிபுரியும்
பேறுதனைப் பெறுகின்ற
பிள்ளை தனைப் பெற்றெடுத்தாய்.

நீ யுதிர்ந்த சேதியினால்
ஊரதிர்ந்து போனதையா
வேரிழந்த உனது கொடி
இலையுதிர்ந்து கருகுதையா
பூச்சொரிந்த மனங்களெல்லாம்
மூச் செறிந்து சோருதையா
ஊருயரப் பணி செய்தாய்
மரணத்தால் நீயுயர்ந்தாய்.

பதவிகள் வேண்டிடாமல்
பணிபுரிந்து வந்தவன் நீ
மதியுடனே காரியங்கள்
துடிப்புடனே செய்தவன் நீ
பதியகன்று சரிதமதை
ஏட்டினிலே பதியவைத்து
தீயுடனே சங்கமித்தாய்
சோகமே உருவாச்சு.

''றோஸ் பவனம்''
அல்வாய் வடமேற்கு, கே. ஆர். திருத்துவராஜா.
அல்வாய்,
01 - 10 - 1998

## "இரனின் பார்வையிலே
## எங்கள் இராசேந்திரம்"

அமரர் முருகேசு இராசேந்திரம் அவர்கள் திடீரென மறைந்தது எமக்குப் பெரும் அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் தருகின்றது. நல்ல தேக சுகத்துடன் வாழ்ந்த அமரர் அவர்கள் சடுதியான மார்பு வலிகாரணமாக நோய்வாய்ப்பட்டு 07-09-98 இல் இறைபதமடைந்தார்,

வாழும் போது நல்ல கல்விமானாய், நல்ல பண்ணிசையாளனாய், நல்ல பாடகனாய், நல்ல நகைச் சுவைப்பேச்சாளனாய் சமூகத்தில் வலம் வந்தார். நமது சனசமூகநிலையத்தின் உருவாக்கத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் வித்திட்டவர். சமூகமட்டத்திலான பொதுப்பிரச்சனைகளைத் தீர்த்துவைக்கும் சமாதானப் பிரியராகவும் திகழ்ந்தவர். தான்மட்டுமல்லாது தனது குடும்பத்தின் அனைவரும் நிலைய வளர்ச்சிக்கும், ஆலய வளர்ச்சிக்கும் உறுதுணையாக நின்று பணிபுரிய வழி காட்டியவர்.

அமரர் அவர்களின் சிரேஷ்ட புதல்வனான திரு. இராஇராஜேஸ்வரன் அவர்கள் நல்ல கவிஞனா கவும், பாடகனுமாக மிளிர்வது தந்தையர் வசம் பெற்ற ஞானமே என துணிந்து கூறலாம். அன்னாரது பிரிவானது அவர் சார்ந்த குடும்பத்திற்கு மட்டுமல் லாமல் எமது சமூகத்திற்கும் பேரிழப்பாகும். அமரரது 60ம் நினைவு நாளில் அன்னாரை நினைவு கூர்வதுடன் அன்னாரது பிரிவினால் துன்புறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள் வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைவதாக.

நக்கீரன் சனசமூக நிலையம்
நக்கீரன் மாதர் அபிவிருத்திச்சங்கம்
குச்சம் ஞானவைரவர் தேவஸ்தான
பரிபாலனசபை, திருப்பணிச்சபை.

# அன்போடு அப்பாவுக்கோர் மடல்

என்னுயிரில் உறைந்து விட்ட
ஏற்றம் மிகு என் அப்பா!
அந்நிய மண்ணினிலே
அப்பா நான் அழுகின்றேன்...

கன்னி என்ற நிலை வரைக்கும்
கண்போலக் காத்து எனை
கல்வி தந்து, மணம் நிறைந்த
கணவனையும் தேடி எனை
கண்காணா தேசத்திலே
களி கூர வாழ வைத்தாய்.

முன்னர்
எழுதிவைத்த மடலொன்றை
இறையை நொந்து இப்போதான்
உயிர்த்தீயால் உலரவைத்தேன்..
ரெலிபோன் வழிச் செய்திகேட்டு.

மனதோடு நெருங்காத பேர்த்தி
உயிர்மாளா அழுகின்றாள்
"போட்டோ" வில் பார்த்த உங்கள்
பேர்த்தியை மடியில் வைத்து
சோறூட்ட நான் ரசிப்பேன்
என்றிருந்தேன்.. ஏனப்பா?

வரன் கிடைத்து வெளிநாடு
வந்த வேளை - உங்கள்
சிறு உழைப்பில் சேகரித்து
உயிர் பின்னித் - தந்த
,சாறி' யொன்று கொடிகிடந்து
எனைப் பார்த்து - சாற்றுவதேன்
உயிர்நிறைய
உங்கள் பெயர்?....

அப்பா! என் சின்னண்ணன்
உயிரிழந்து ஏங்குகிறான்
'அத்தானும்' அழுகின்றார்
ஆறுதலுக் கெங்கு போவோம்
அந்நியமாய் போனோமே!

உயிர் கருகும்
சின்னமகள்.

## தேற்றம்

எப்படியும் வாழலாம்! எங்கேயும் வாழலாம்!
எவ்வளவு காலத்தையும் ஏற்றமுடன் வாழலாம்!
இப்படியே வாழ்ந்திடுவோம் என்றிருந்தோம்
எல்லோரும்!
எப்படியும் ஒருநாளில் இறப்பதுதான் திண்ணமாமே!



# நன்றி

★ எமது குடும்ப விளக்கின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறிய அயலவர்கள், உற்றார் உறவினர்கள்.

★ அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்

★ யாழ் லயன்ஸ் கழக உறுப்பினர்கள்

★ பரு. ப. தெ. வ. கூ. ச. ஊழியர்கள்

★ அனுதாபச் செய்தி அனுப்பிய உறவினர்கள், நண்பர்கள்,

★ அகால வேளைகளில் வைத்திய உதவி புரிந்த வைத்தியர்கள்,

★ இராஜகோபுரம் பொலிவு பெற விடயதானம் செய்து உதவியவர்கள்,

★ அன்னாரின் அந்தியேஷ்டிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்கள்,

★ இந்நூலை அச்சிட்டு உதவிய தமிழ்ப்பூங்கா அச்சகத்தினர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்

குடும்பத்தினர்.

தமிழ்ப்பூங்கா அச்சகம்—நெல்லியடி, கரவெட்டி.